துணிப்பையை கையில் எடுப்போம்! பிளாஸ்டிக் பையை கைவிடுவோம்!

# பாப்பிரெட்டிபட்டி தேர்வுநிலைப் பேரூராட்சி
# தருமபுரி மாவட்டம்

ந.க.எண்.432/2022/அ1/ நாள்: 30.06.2022

## 15வது நிதிக்குழு மான்யம் (Untied Basic Grant) 2021–22
## முதல் மற்றும் இரண்டாம் தவணை

## ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு
## (இரு உறை ஒப்பந்தப்புள்ளி )

பாப்பிரெட்டிபட்டி தேர்வுநிலைப் பேரூராட்சியில் 2021–22 ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்யம் (Untied Basic Grant) முதல் மற்றும் இரண்டாம் தவணை திட்டத்தின் கீழ் ரூ.14.70 இலட்சம் மதிப்பீட்டில், கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் **26.07.2022** பிற்பகல் **3.00** மணி வரை இப்பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால், ஒப்பந்தப்புள்ளி முறையில், (மின்னணு முறையில் E-Tender) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை **3.30** மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில், செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **25.07.2022** பிற்பகல் **3.00** மணி வரை இணையதளத்திலிருந்து **E-Token/Digital Signature card** உபயோகித்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். ஒப்பந்தபுள்ளி கொடுப்பவர்கள் அட்டவணை கலம் எண்.5 இல் காணும் விவரப்படியான முன்வைப்புத் தொகைக்கு **"செயல் அலுவலர், பாப்பிரெட்டிபட்டி தேர்வுநிலைப் பேரூராட்சி "** என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து பெறப்பட்ட வங்கி வரைவோலையை (DD/Banker Cheque) முன் வைப்புத் தொகையாக இணைத்து **26.07.2022ந் தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் இவ்வலுவகத்திற்கு வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.** காலம் தாழ்த்தி வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும். இதர விபரங்களை அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளவும்.

### 15வது நிதிக்குழு திட்டம் 2021–22 (Untied Basic Grant) முதல் தவணை

| வ எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தபுள்ளி படிவத்தின் விலை ரூ. (விற்பனை வரி) | 2% சதவீதம் முன்வைப்பு தொகை ரூ | வேலை முடிக்க வேண்டிய கால அளவு (மாதத்தில் ) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | வார்டு எண்.9 அலமேலுபுரம் அருந்ததியர் மயானத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல் | 7.50 | 3540 | 15000 | 3 மாதங்கள் |

### 15வது நிதிக்குழு திட்டம் 2021–22 (Untied Basic Grant) இரண்டாம் தவணை

| வ எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தபுள்ளி படிவத்தின் விலை ரூ. (விற்பனை வரி) | 2% சதவீதம் முன்வைப்பு தொகை ரூ | வேலை முடிக்க வேண்டிய கால அளவு (மாதத்தில் ) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | பாப்பிரெட்டிபட்டி பேரூராட்சி 10வது வார்டு காளியம்மன் கோயில் தெரு, 11வது வார்டு மூப்பனார் கோயில் தெரு பகுதியில் பைப்லைன் அமைத்தல் | 7.20 | 3540 | 14400 | 3 மாதங்கள் |

# <u>ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்</u>

1. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்பணிகளில் குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும் .

2. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி கோரும் பணியின் மொத்த மதிப்பில் 50 சதவிகிதம் பணியினை (தார் சாலை, சிமெண்ட் சாலையுடன் கூடிய தார்சாலை ஆகிய பணிகளில் ஏதேனும் ஒரே பணியாக 2016–17ம் ஆண்டு முதல் 2020–21 ஆண்டிற்குள் அரசு/வாரியம்/அரசு சார்ந்த நிறுவனம்/உள்ளாட்சி அலுவலகங்களில் செய்து முடித்திருக்க வேண்டும்.

3. ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் ஒப்பந்ததாரர் இறுதியாக பெறப்பட்ட வருமான வரி மற்றும் விற்பனை வரி சான்றினை இணைக்க வேண்டும்.
4. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் வேலைகள் நடைபெறும் போது இயற்கை இடர்பாடுகள் மற்றும் விபத்துகள் நடைபெறும் போது அதற்கான முழுப்பொறுப்பிற்கும் ஒப்பந்ததாரரே சார்ந்தவராவார் அதற்கான காப்புறுதி செய்து கொள்ள ஒப்பந்ததாரர் கடமைப்பட்டவராவார்.
5. ஒப்பந்ததாரர் மேற்படி பணியினை பார்வையிட தொழில் நுட்ப உதவியாளரை தன் சொந்த செலவில் நியமனம் செய்து கொள்ள வேண்டும்.
6. ஒப்பந்ததாரரால் செய்யப்படும் வேலைகள் மற்றும் பொருட்களுக்கு தர நிர்ணய சான்று பேரூராட்சி அலுவலர்களால் கோரும் பட்சத்தில் பெற்றுத்தரப்படவேண்டும் இதற்கான கட்டணம் ஒப்பந்ததாரரையே சாரும்.
7. ஒப்பந்ததாரர் வங்கி உத்திரவாத சான்று பெற்று இணைக்க வேண்டும்.
8. பணிக்கு செலுத்த வேண்டிய டேவணித்தொகை வங்கி வரைவோலையாக மட்டுமே செலுத்த வேண்டும். அரசால் வெளியிட்ட தேசிய சேமிப்பு பத்திரம் அல்லது அரசு கடன் பத்திரம் ஆகியவைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
9. ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைக்குள் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும் டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி ‘’**<u>செயல் அலுவலர் பாப்பிரெட்டிபட்டி பேரூராட்சி</u>**’’ என்று முகவரியிட்டு கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்தக்காரர்களின் முழு அஞ்சல் முகவரியுடன் இருக்க வேண்டும்.
10. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையோ எவ்வித காரணமும் கூறாமல் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.
11. வேலைகளை துவக்குவதற்கு முன்பு, கட்டிடத் தொழிலாளர் நலநிதிக்கு மதிப்பீடு தொகையில் 1% வங்கி வரைவோலை எடுத்து ஒப்படைக்க வேண்டும்.
12. வரப்பெற்று முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரம் பெற்ற பின்னரே வேலை உத்திரவு வழங்கப்படும். ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் அதற்குரிய படிவத்தில் ரூ.50/– மதிப்புள்ள ஸ்டாம்பு பேப்பரில் உடன்படிக்கை எழுதித்தர வேண்டும்.
13. வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வேலையை ரத்து செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எந்த இழப்புகளுக்கும் ஒப்பந்தக்காரர்களே முழுபொறுப்பாவார்கள்.
14. பணிக்கு தேவையான தரமான சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகள் ஆகியவற்றை ஒப்பந்ததாரர்கள் தங்களது சொந்த செலவில் வாங்கி கொள்ள வேண்டும்.
15. பணி முடிக்கப்பட்டு பட்டியல் பெற்றவுடன் விதிமுறைகளின்படி கூடுதல் வைப்பு தொகை, வருமானவரி, GST மற்றும் கட்டிடத்தொழிலாளர் நலநிதி ஆகியவை பிடித்தம் செய்து பட்டியல் தொகை வழங்கப்படும்.
16. வேலை செய்து முடித்த பின்னர், பொறியாளர்கள் வேலையை பார்த்து அளவுகள் மற்றும் மேல் அளவுகள் எடுத்து பட்டியல் தயாரித்து அளித்தவுடன், விதிமுறைகளின்படி உரிய பிடித்தங்கள் செய்த பின்னர் தொகை வழங்கப்படும்.
17. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிக்கும் முன்னரும், பணி நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுதும், பணி முடிந்த பின்னரும் ஆகிய மூன்று நிலைகளிலும் ஒரே இடத்தை சுட்டிக்காட்டும்படியாக தரமான புகைப்படம் எடுக்கப்பட்டு கோப்பில் இணைக்கப்பட வேண்டும்.
18. வேலை நடைபெறும் இடத்தில் பணிகள் குறித்த விவரம் அடங்கிய விளம்பர பலகை நிறுவப்படுதல் வேண்டும்.
19. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை http://townpanchayats.tn.gov.in/tender என்ற பேரூராட்சிகளின் இணைய தளத்திலும், https://tntenders.gov.in என்ற தமிழக அரசு இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
20. இப்பணிகள் தொடர்பாக மத்திய மாநில அரசுகள் பிறப்பிக்கும் அனைத்து உத்திரவுகளுக்கும் கட்டுப்பட்டு பணிகளை செய்து முடிக்க வேண்டும்.
21. E-tender மூலம் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பதிவிறக்கம் செய்து, ஒப்பந்ததாரர் மூலம் தரப்படும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மேற்காணும் அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.

22. இப்பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரே தனது சொந்த செலவில் சீரமைக்க வேண்டும்.

23. கட்டுமானப்பணிகள் மற்றும் இதர பணிகளுக்கு தேவையான தண்ணீரை ஒப்பந்ததாரரே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். பேரூராட்சி மூலம் தண்ணீர் ஏதும் சப்ளை செய்ய இயலாது.

**(ஒம்)மா.மாரி,**
**செயல் அலுவலர்**
**தேர்வுநிலைப் பேரூராட்சி,**
**பாப்பிரெட்டிபட்டி, தருமபுரி மாவட்டம்.**

**(ஒம்)ஆர்.கலைராணி,**
**செயல் அலுவலர்(பொ)**
**தேர்வுநிலைப் பேரூராட்சி,**
**பாப்பிரெட்டிபட்டி, தருமபுரி மாவட்டம்.**

**பெறுநர்** :-
பதிவு பெற்ற பேரூராட்சி ஒப்பந்ததாரர்கள்,
பொதுப்பணித்துறை/நெடுஞ்சாலைத்துறை/
மின்வாரிய ஒப்பந்ததாரர்கள்(வகுப்பு 1)
அனைத்து அரசு அலுவலக விளம்பர பலகைக்கு

**நகல்:** தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தருமபுரி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
**நகல்:** உதவி செயற்பொறியாளர்,தருமபுரி மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
**நகல்:** உதவி / இளநிலை பொறியாளர் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
**நகல்:** அலுவலக விளம்பர பலகைக்கு.